# சென்னை புத்தகச் சங்கமம்

உலகப் புத்தக நாள் பெருவிழா | 20-25, ஏப்ரல் 2018

# CHENNAI PUTHAGA SANGAMAM

World Book Day Festival | 20-25, April 2018

பெரியார் திடல், வேப்பேரி, சென்னை–7.
Periyar Thidal, Vepery, Chennai-7.

அன்புடையீர், வணக்கம்!

உலகப் புத்தக நாள் விழாவையொட்டி பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் ‘‘சென்னை புத்தகச் சங்கமம்’’ என்னும் பெயரில் மாபெரும் புத்தகக் காட்சியை கடந்த அய்ந்து ஆண்டுகளாக நடத்தி வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

கடந்த இரண்டாண்டு முற்றிலும் வித்தியாசமாக புத்தகக் காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்ட அனைத்து புத்தகங்களும் 50% சிறப்பு தள்ளுபடியில் விற்பனை செய்யப்பட்டது. வாசகப் பெருமக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றது. அதனடிப்படையில் பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் பயன்பெறும் வகையிலும், பொது மக்களிடம் புத்தக வாசிப்புத் திறனை மேம்படுத்தும் வகையிலும் **‘உலகப் புத்தக நாள் பெருவிழா’**வை சென்னை பெரியார் திடலில் வருகின்ற **ஏப்ரல் 20, 21, 22, 23, 24 மற்றும் 25** ஆகிய ஆறு நாட்களில் இந்த ஆண்டும் எளிய முறையில் சற்று வித்தியாசமாக நடத்த முடிவு செய்துள்ளோம்.

இந்நிகழ்வில் 50 விழுக்காடு தள்ளுபடி விலையில் முக்கிய புத்தகங்களைப் பல்வேறு பதிப்பாளர்களிடமிருந்து பெற்று காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

எனவே, பொது மக்களுக்கு 50 விழுக்காடு தள்ளுபடி விலையில் தர வாய்ப்புள்ள புத்தகங்களை மட்டும் தாங்களும் தங்கள் சக பதிப்பாளர்களும் வழங்கினால் அனைத்து புத்தகங்களையும் ஒரே அரங்கில் காட்சிப்படுத்தி விற்பனைக்கு வைப்பதன் மூலம் **‘ஆயிரக்கணக்கான தலைப்புகளில் - 50 விழுக்காடு** தள்ளுபடி **விலையில் - லட்சக்கணக்கான புத்தகங்களை’** பொது மக்களிடம் கொண்டுப்போய்ச் சேர்க்கும் வாய்ப்பு இருக்கிறது.

ஆகவே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தாங்கள் அளிக்க விரும்பும் புத்தகங்களைப் பற்றிய விவரங்களை **31.03.2018-க்குள்** அளித்து உதவிடுமாறு வேண்டுகிறோம்.

மேலும், கடந்த ஆண்டைப் போல் இந்த ஆண்டும் மாலை நேர சிறப்பு சொற்பொழிவுகளும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புத்தக வாசகப் பெருமக்களுக்கு அனுமதி இலவசம்.

நாள்: 12.03.2018

(ப.சீதாராமன்)
மேலாளர்

# விதிமுறைகள்

- பதிப்பாளர்கள் தங்கள் நிறுவன வெளியீடுகளை மட்டும்தான் வழங்க வேண்டும்.
- பதிப்பகங்கள் வழங்கும் புத்தகங்களை ஏற்பதற்கும், நிராகரிப்பதற்கும் சென்னை புத்தக சங்கமத்தேர்வுக் குழுவிற்க்கு முழு உரிமை உள்ளது.
- பொது மக்கள் வாங்கும் அனைத்து புத்தகங்களுக்கும் 50 விழுக்காடு தள்ளுபடி உண்டு என்று அறிவிப்பு செய்ய இருக்கிறோம். அதனால், சென்னை புத்தகச் சங்கமத்திற்கான சேவைக் கட்டணம் 10 விழுக்காடு சேர்த்து பதிப்பாளர்கள் 60 விழுக்காடு தள்ளுபடியில் அனைத்து புத்தகங்களுக்கும் வழங்க வேண்டும்.( விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் மொத்த தொகையிலிருந்து சேவைக்கட்டணம் பெறப்படும்).
- பதிப்பாளர்கள் 50 தலைப்புகளில் 5 முதல் 10 எண்ணிக்கைகள் வரை புத்தகங்கள் வழங்கலாம்.
- பதிப்பாளர்கள் வழங்கும் அனைத்து புத்தகங்களிலும் விலை அச்சிடப்பட்டிருக்க வேண்டும். பதிப்பாளர்கள் தங்கள் நிறுவன பெயரில் உள்ள இரசீது (Bill) பட்டியல் மூலம் புத்தகங்கள் வழங்க வேண்டும்.
- **தங்கள் பதிப்பகத்திற்கென தனியே அரங்கம் அமைக்க விரும்பும் பதிப்பாளர்கள் சென்னை புத்தகச் சங்கம மேலாளரை நேரில் தொடர்பு கொள்ளவும்.**
- புத்தகங்களை பார்சல் சர்வீஸ், கூரியர் மூலம் அனுப்பாமல் நேரடியாக பெரியார் திடலுக்கு வந்து சென்னை புத்தகச் சங்கம அலுவலகத்தில் உரிய பொறுப்பாளரிடம் நேரில் 15.04.2018-க்குள் ஒப்படைக்க வேண்டும்.
- தாங்கள் வழங்கிய புத்தகங்களில் விற்பனை செய்தது போக மீதமுள்ள புத்தகங்களை 26.04.2018 காலை 10 மணி முதல் 5 மணிக்குள் நேரில் வந்து எடுத்துச் செல்ல வேண்டும்.
- தங்கள் நிறுவனத்திற்கு கொடுக்கவேண்டிய விற்பனைத் தொகையை விண்ணப்ப படிவத்தில் பதிவு செய்த பெயரிலேயே காசோலை மூலம் 10.05.2018-க்குள் வழங்கப்படும்.


தொடர்புக்கு:

ப.சீத்தாராமன்

மேலாளர்

**சென்னை புத்தகச் சங்கமம்**

பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-7.

தொலைபேசி: 044-26618161 / 62 / 63

மின்னஞ்சல்: chennaiputhagasangamam@gmail.com

இணையதளம் : www.chennaiputhagasangamam.com

# சென்னை புத்தகச் சங்கமம்

உலகப் புத்தக நாள் பெருவிழா | 20-25, ஏப்ரல் 2018

# CHENNAI PUTHAGA SANGAMAM

World Book Day Festival | 20-25, April 2018

பெரியார் திடல், வேப்பேரி, சென்னை-7.
Periyar Thidal, Vepery, Chennai-7.

## பதிவுப் படிவம் / REGISTRATION FORM

1. பங்கு பெறும் நிறுவனத்தின் பெயர்
   Name of the Institution : ...........................................................................

2. முகவரி / Address : ...........................................................................
   ...........................................................................
   ...........................................................................

3. தொலைப்பேசி எண் / Tel. No. : ...........................................................................
   மின்-அஞ்சல் / E-mail ...........................................................................

4. தொடர்பு கொள்ளப்பட வேண்டியவரின்
   பெயரும் தொலைப்பேசி எண்ணும் : ...........................................................................

| 5. பதிப்பாளர் வழங்கும் புத்தக விபரம் | மொழி வாரியாக எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | தமிழ் | ஆங்கிலம் | பிறமொழி | |
| புத்தகத் தலைப்புகள் (No.of Book Titles) | | | | |
| புத்தகங்கள் எண்ணிக்கை (No.of Books) | | | | |
| மொத்த மதிப்பில் (60% தள்ளுபடி போக) (Total Value with 60% Discount) | | | | |

குறிப்பு: புத்தக விவரப்பட்டியல் மாதிரிப்படிவத்தில் உள்ளபடி இணைத்து அனுப்ப வேண்டும்.

### உறுதி மேற்கொள்ளுதல்

சென்னை புத்தகச் சங்கமத்தில் பங்கேற்பதற்கான பதிவுப் படிவத்தையும், விதிமுறைகளையும் முழுமையாகப் படித்துப் புரிந்து கொண்டோம். அதில் கூறப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளுக்கும் நாங்கள் கட்டுப்படுவோம். அதை மீறினால் புத்தகச் சங்கமத்தில் எங்கள் புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படாது என்ற நிபந்தனையையும் நாங்கள் அறிவோம்.

நாள்: அலுவலக முத்திரை கையொப்பம்

# புத்தகங்கள் வழங்குவதற்குரிய மாதிரிப் படிவம்

| வ எண் | புத்தகத்தின் பெயர் | ஆசிரியர் | பக்கங்கள் | விலை (புத்தகத்தில் அச்சிட்டுள்ளபடி) | 60% தள்ளுபடி போக விலை | அளிக்கப்படும் எண்ணிக்கை | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம்:______ தலைப்புகளில் ________ எண்ணிக்கை புத்தகங்களுக்குரிய மொத்தத் தொகை | | | | | | | |

நாள்:

நிறுவனத்தின் முத்திரை

பதிப்பாளர் கையொப்பம்

மாதிரிப் படிவத்தினை நகல் எடுத்தோ (அல்லது) கணினியில் தட்டச்சு செய்தும் வழங்கலாம்.

குறிப்பு: தாங்கள் வழங்கும் அனைத்து புத்தகங்களுக்கும் 60% கழிவுடன் கூடிய பட்டியலை (Bill) “PSRPI, Chennai” என்ற பெயருக்கு தனியே இணைத்து வழங்க வேண்டும்.